## வரையறுக்கப்பட்ட சீபாங் ஹொலிடே ஹோம்ஸ் (தனியார்) கம்பனி – 2017

---

வரையறுக்கப்பட்ட சீபாங் ஹொலிடே ஹோம்ஸ் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் இலாப நட்டக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது.

அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இணக்கஞ் செய்யப்படாத மற்றும் இனங்காணப்படாத வித்தியாசங்கள்

நலன்புரி பிரிவினூடாக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டிற்கான பெறப்பட்ட காசினை இனங்காண்பதற்காக முறையான செய்முறை பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவால், ரூபா 1,170,629 தொகையானது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத வைப்புக்களாகவிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 151,600 வரிக்கு முன்னரான நட்டத்திற்கு எதிராக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 2,751,826 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 2,903,426 இலாப அதிகரிப்பன்றை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது இலங்கை வங்கியிடமிருந்து சீவங்கி றெஸ்ர்க்களின் நீர் சிட்டைகள் மற்றும் மின்சார பட்டியல்களின் மீளளிப்பு இந்த முன்னேற்றத்திற்கு மாதாந்தம் தாக்கமளித்திருந்தது.

**3.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்**

கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதம் | 2017 | 2016 |
|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள் (சதவீதம்)** | | |
| தேறியலாப விகிதம் | 1.46 | (0.32) |
| மொத்தச் சொத்துக்கள் மீதான திரும்பல் | 5.19 | (1.63) |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 76.36 | (72.53) |
| **திரவத்தன்மை விகிதங்கள் - (தடவைகளின் எண்ணிக்கை)** | | |
| நடைமுறை விகிதம் | 0.89 | 0.72 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில கம்பனியின் ஒட்டுமொத்த செயலாற்றல், திரவவிகிதங்கள் மற்றும் இலாபத்தன்மை விகிதங்கள் அதிகரித்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 திட்டமிடல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியால் மீளாய்வாண்டிற்காக கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் நோக்கங்களை அடையாமல், கம்பனியானது இணங்கப்பட்ட முகாமைத்துவ கட்டணங்களின் கீழ் இலங்கை வங்கியின் பதவியணியின் நன்மைக்காக நான்கு பிஓசீ உணவகங்கள், ஏழு விடுமுறைகள், இருபத்து மூன்று பதவியணி இல்லங்கள், விடுதிகள் மற்றும் மஹரகம பயிற்சி நிறுவகம் போன்றவற்றை முகாமைசெய்வன் மூலம் இலங்கை வங்கியின் முகாமைத்துவ முகவராக செயற்படுகின்றது.

(ஆ) கதரஹமவிலுள்ள சீவங்கியின் நட்டமானது 68.8 சதவீதத்தால் குறைவடைந்ததுடன் அனுராதபுரத்திலுள்ள சீவங்கியின் இலாபமானது இலங்கை வங்கியிலிருந்து முறையே கதரஹம மற்றும் அனுராதபுரத்திலுள்ள ரூபா 2,109,942 மற்றும் ரூபா 5,387,556 கூட்டுத்தொகையான மின்சார மற்றும் நீர் சிட்டைகளின் மீளளிப்பினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 127.6 சதவீதத்தால் அதிகரித்தது. மேலும், நுவரெலியாவிலுள்ள சீவங்கியின் இலாபமானது ரூபா 2,201,926 ஆல் குறைவடைந்த நேரம் டிக்கோயாவிலுள்ள கிலேன்செபரன் சுற்றுலா விடுதியானது அதில் ஸ்தாபிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் உபகரணத்தின் மந்தமான நிலைமை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 752,821 குறிப்பிடத்தக்களவு நட்டத்தைக் காட்டியது.

(இ) ரூபா 11,455,159 கூட்டுத்தொகையான தலைமை அலுவலகத்தின் பொதுச்செலவீனங்கள் ஒவ்வொரு கிரய நிலையங்களிற்கும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கதரஹம மற்றும் அநுராதபுரத்திலுள்ள சீவங்கியிற்கான கட்டிட வாடகை உடன்படிக்கைகளானது 2014 திசெம்பர் 31 இல் காலாவதியாகியிருந்ததுடன் 2015 சனவரியிலிருந்து புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நுவரெலியாவிலுள்ள சீவங்கி மற்றும் விடுமுறை இல்லங்களிற்கிடையில் எந்தவித வாடகை உடன்படிக்கையும் இருக்கவில்லை.

(ஆ) சமையலறை மற்றும் கழிவகற்றல் முறைமையிலுள்ள மந்தமான நிலைமையினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் ‘‘தரம் ஏ’’ இலிருந்து ‘‘தரம் ஆர்’’ இற்கு நுவரெலியாவிலுள்ள சீவங்கி தரமிறக்கப்பட்டது.

(இ) நீர்ச்சிட்டைகள் மற்றும் இலத்திரனியல் சிட்டைகள் காலதாமதமான கொடுப்பனவால் ரூபா 85,058 தொகை தண்டப்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஊழியர்களின் மாதாந்த சேவைக்கட்டணத்தில் 10 சதவீதத்தை உண்மையான தடங்கல்களிற்கான மீளமைத்தல் கிரயமாக ஈடுசெய்வதற்காக பிடித்து வைத்தல் கம்பனியின் வழக்கமாகும். 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மேற்கூறப்பட்ட கணக்கில் உள்ளவாறான மீதியானது ரூபா 3,178,454 ஆகும். எனினும், கம்பனியானது அந்த மீதியான ஒவ்வொரு வருடத்திலுமுள்ள ஊழியர்களிற்குமிடையில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஆகையால், இந்த மீதியானது பலவருடங்களுக்கு மேலாக திரட்டப்பட்டிருந்தது. மேலும், இந்த பணத்தை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டஉபகரணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருந்தது.

**4.3 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதிவரை பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து பதவியணிக்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**4.4 நிலையான சொத்துக்களினை செவ்வை செய்தல்**

---

சீ வங்கி ஹொலிடே ஹோம்ஸ் இற்கு சொந்தமான நிலையான சொத்துக்களை செவ்வை செய்வதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வெளியக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டார். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேற்கூறப்பட்ட வேலையை வழங்கும் போது கம்பனியால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போட்டியினூடாக அதிகூடிய நன்மையை பெறுவதற்காக பல தொழிற்சாலைகளை வழங்குவோரிடமிருந்து விலைமனு கோரப்பட்டிருக்கவில்லை.

(இ) இந்த வேலைக்காக கம்பனியின் உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்துவதற்கான சாத்தியத்தன்மையானது கம்பனியால் கருத்திற் கொண்டிருக்காத அதேநேரம் மேற்கூறப்பட்ட வேலைக்காக சேவை வழங்குவதாக மேற்கூறப்பட்ட பற்றுச்சீட்டு தொகையானது ரூபா 759,268 கம்பனிக்கு சொந்தமான நிலையான சொத்துக்களை இனங்காண்பதற்கும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை தயாரிப்பதற்கும்

வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த வேலைக்குட்படாத நகர அபிவிருத்தி அதிகாரசபை போன்ற இலங்கை வங்கிக்குரிய மற்றும் ஏனைய வெளித்தரப்பினரிற்கு பல சொத்துக்கள் சொந்தமாகவிருந்தது.

(ஈ) வேலையானது 2017 பெப்ரவரி 04 இல் தொடங்கப்பட்டிருந்த போதிலும் அறிக்கையானது 2018 மார்ச் 07 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை ஒழுங்கு முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்துவதற்கு வேண்டப்பட்டது. எனினும், கம்பனியானது, மீளாய்வாண்டின் போது எந்தவொரு கணக்காய்வுமற்றும் முகாமைத்துவக் கூட்டங்களையும் நடாத்தியிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டு பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (i) | கடன்பட்டோர் | அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் கடன்பட்டோர்களை இனங்காண்பதற்காக கொள்கை இல்லாமை. |
| (ii) | சொத்து முகாமைத்துவம் | இனங்காணல் நோக்கங்களிற்காக நிலையான சொத்துக்கள் உருப்படிகள் லேவலிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | கணக்கீட்டு முறைமை | கம்பனியானது முறையான பேரேட்டு பதிவு செய்முறையை பின்பற்றியிருக்காததுடன் பேரேட்டிற்கு பதிவுசெய்யப்பட்ட பேரேட்டு பதிவுகளிற்காக பேரேட்டு பற்றுச்சீட்டை பராமரித்திருக்கவில்லை. |